[திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்] [2022 ஏப்ரல் 27

இருக்கும் என்று சொன்னால், பாதிப்பு வராத இடங்களில், இறால் பண்ணைகளை திட்டமிட்டு, சரியாக வளர்த்து, மீன் வளத்தில் ஆந்திராவிற்கு முதலிடம் அல்ல, தமிழ்நாட்டிற்குத்தான் முதலிடம் என்ற நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம். இறால் பண்ணையே வைக்கக்கூடாது என்று சொன்னால், அது எந்தவகையிலும் சரியில்லை. அதனுடைய பாதிப்புகளைத் தடுப்பதற்கான வழிவகைகளை, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மீன் பண்ணைகளை வளர்ப்பதற்கும், மீன்களை வளர்ப்பதற்கும், அதன்காரணமாக எந்தப் பகுதியும் பாதிக்கப்படாத வகையிலே நடைமுறைப்படுத்தவும், சரியான வழியில் எங்களுடைய துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2022 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

பிற்பகல் 1–05

8. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 24 – சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(இ) கோரிக்கை எண் 33 – சட்டத் துறை

(ஈ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(உ) கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(அ) கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*